அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:8 Issue :29 January 2026*

கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235


**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.



நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# தமிழ்

# விந்தன் புதினங்களில் பெண்கள் - ஒரு பெண்ணியப் பார்வை

*Vindhan Puthinangalil Pengal- Oru Penniaya Paarvai*

**ப.யாழ்மொழி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,அ.வீரையாவாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது),பூண்டி-**613503,** தஞ்சாவூர் மாவட்டம். ORCiD:https://orcid.org/0009-0003-1949-0804

**முனைவர் நா.சிவாஜிகபிலன்,** ஆய்வு நெறியாளர், தலைவர் & இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,

அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி (தன்னாட்சி),(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) ,பூண்டி-**613503,** தஞ்சாவூர் மாவட்டம். ORCiD: https://orcid.org/0000-0001-8818-6038

***P.Yazhmozhi,*** *Research Scholor, Department of Tamil, A.Veeriya Vandaiyar Memorial Sri Pushpam College (Autonomous)(Affiliated with Bharathidasan University), Poondi-613503, Thanjavur District. ORCiD:https://orcid.org/0009-0003-1949-0804*

***Dr. N.Shivaji kabilan,*** *Research Advisor, Head & Associate Professor, Department of Tamil , A. Veeriya Vandaiyar Memorial Sri Pushpam College (Autonomous), (Affiliated with Bharathidasan University), Poondi-613503, Thanjavur District. ORCiD: https://orcid.org/0000-0001-8818-6038*

***Abstract***

*The author Vindhan has made social problems, the condition of women, and problems related to love life the subject of his novels, and has earned a place for himself by infusing life and emotion into novel literature. This article examines the plight of the female characters in Vindhan's works such as Kan Thirakkuma, Paalum Paavaiyam, Swayamvaram, Anbu Alaarukirathu, Manithan Maaravillai, and Kadhalum Kalyanamum, and the ideas the author wants to convey to society through the female characters.*

***Keywords*** *: Beauty, Sexuality, Motherhood, Love ,Marriage*

**ஆய்வுச் சுருக்கம் :**

எழுத்தாளர் விந்தன் தம் படைப்புகளில் சமூகப் பிரச்சனைகள், பெண்களின் நிலை, காதல் வாழ்க்கைத் தொடர்பான பிரச்சனைகளை புதினங்களுக்குக் கருப்பொருளாக்கியவர். புதின இலக்கியத்தில் வாழ்க்கையையும் உணர்ச்சியையும் புகுத்தித் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றவர் எழுத்தாளர் விந்தன். இக்கட்டுரை விந்தனின் கண் திறக்குமா?, பாலும் பாவையும், சுயம்வரம், அன்பு அலறுகிறது, மனிதன் மாறவில்லை, காதலும் கல்யாணமும் போன்ற படைப்புகளில் வரும் பெண் கதாபாத்திரங்களின் அவலத்தையும், பெண் கதாபாத்திரங்கள் மூலம் ஆசிரியர் சமூகத்திற்குச் சொல்ல விரும்பும் கருத்துகளையும் ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள் :** அழகு, பாலியல், தாய்மை, அன்பு, திருமணம்

**முன்னுரை**

புதின இலக்கியம் என்பது மனித வாழ்க்கையினை எடுத்துக்காட்டும் வாழ்வியல் இலக்கியமாகும். புதினம் கற்பனையான அல்லது உண்மை நிகழ்வுகளின் வாழ்க்கையை உரைநடையில், நீண்ட வடிவில் விவரிக்கும் ஓர் இலக்கிய வடிவம். புதினங்கள் எல்லாம் வாசிப்பவர்களைக் கற்பனை உலகிற்கு அழைத்துச் செல்கின்றன எனலாம்.

புதினம், மனித உணர்ச்சிகள், எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டும் கண்ணாடியாகும். புதினம் தோன்றக் காரணம் எதுவெனில் அவனைப் போன்ற மற்றைய மனிதர்களின் வாழ்க்கை அதில் இடம்பெற்றமைதான். “மக்களின் மனதில் தோன்றும் உணர்ச்சிகள், போராட்டங்கள், முதலியவையே இப்புதினங்கள் முகிழ்க்கத்தக்க நிலைக்களங்களாயின” (இலக்கியக் கலை, பக்.308-309) என்று, அ.ச.ஞானசம்பந்தன் கூறுகின்றார். படைப்பாளன் தம்மைச் சுற்றியிருக்கும் சமுதாயத்தின் நிகழ்வுகளை உற்றுநோக்கிச் சீர்தூக்கிப் பார்த்துத் தம் படைப்புகளின் வழியே உலவ விடுகிறான். அவ்வாறே, படைப்பாளர் விந்தன் தம் புதினங்களில் சமுதாயச் சிக்கல்கள், பெண்களின் நிலை, காதல் வாழ்வு பற்றிய சிக்கல்களைக் கதைப் பொருளாக்கி, புதின இலக்கியத்திற்கு உயிரும் உணர்வும் ஊட்டி தனக்கென ஓர் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டவராவார்.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பது தந்தைவழிச் சமூகத்திலிருந்து தாய் வழிச் சமூகத்திற்கான உரிமையைப் பெறுவதாகும். ஆண்களைப் போன்று பெண்களுக்கான விருப்பங்களும் எண்ணங்களும் சுதந்திரப் போக்கைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதையே பெண்ணியம் வலியுறுத்துகிறது. இதனை, “பெண்ணியம் என்ற கோட்பாடானது, ஆண்கள் எந்த அளவு சமூக அமைப்பிலும், பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஈடுபட்டு உரிமை கொண்டாடுகிறார்களோ அந்த அளவுக்குப் பெண்களுக்கும் மேற்கூறிய துறைகளில் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட

வேண்டும் என்று கூறுவதோடு, அதனடிப்படையில் நன்கு வரையறுக்கப்பட்ட சமூக அமைப்பை உருவாக்கித் தரவும் முயலுகிறது''( பெண்ணியம்,ப.2) என்று பெண்ணியவாதி இரா.பிரேமா கூறுவதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், பெண்ணியம் என்பது, ''ஆண்களின் அதிகாரத்தையும் ஆளுகையையும் எதிர்த்துச் செயல்படும் உணர்வுநிலை'' ( தமிழிலக்கியமும் பெண்ணியமும்,ப.1) என்பார் அரங்க.மல்லிகா. ''பெண்களுக்கான உரிமையை வேண்டுவது பெண்ணியக் கருத்தாக்கத்தில் அடங்கும். பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரத்தை நிலைநாட்டுதல் ஆணாதிக்கத்தை அடையாளம் கண்டு அதனை எதிர்த்தல், பெண்களின் மீதான அனைத்து வகை ஒடுக்குமுறைகளையும் ஆராய்ந்து அதனைப் போக்குவதற்கான தீர்வுகள், விடுதலை பெறுவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுதல் பெண்ணியச் செயற்பாடுகள் ஆகும்'' (ராஜம் கிருஷ்ணன், காலந்தோறும் பெண்மை,ப.10) என்னும் கூற்றிலிருந்து பெண்ணியத்தின் கோட்பாட்டுத் தன்மைகளை அறியலாம்.

**விந்தன் புதினங்களில் பெண்கள்**

விந்தன் படைப்புகளாகிய கண்திறக்குமா?, பாலும் பாவையும், சுயம்வரம், அன்பு அலறுகிறது, மனிதன் மாறவில்லை, காதலும் கல்யாணமும் ஆகிய புதினங்களில் இடம்பெறும் பெண் பாத்திரங்களின் அவல நிலை, அப்பாத்திரங்களின் மூலம் ஆசிரியர் சமுதாயத்திற்குக் கூற விழையும் கருத்துக்களை இக்கட்டுரையில் ஆராயலாம்.

**தலைமைப் பாத்திரங்கள்**

புதினங்களின் முக்கிய நிகழ்வில் பங்கேற்பவர்கள் கதையை நடத்திச் செல்வதில் பெரும்பங்கு வகிப்பவர்கள் தலைமைப் பாத்திரங்கள் ஆவர். "தலைமைப் பாத்திரம் கதை நிகழ்ச்சிகளைச் சுற்றியே சுழல்பவர்களாக விளங்குவதால் அவர்கள் குறிக்கோள் பாத்திரங்களாக அமைவர்" (தி.ஜா.ரா.,நாவல்கலை,ப.76) எனக் கோ.வே.கீதா கூறுகிறார். இக்கூற்றுக்கேற்ப விந்தன் புதினங்களில் தலைமைப் பாத்திரங்கள் கதை நிகழ்வினை முன்னெடுத்துச் செல்வதோடு உலகிற்கு எடுத்துக்காட்டாக விளங்குவதில் தலைமை வகிக்கின்றன.

விந்தன் தம்முடைய பாத்திரங்களைப் பற்றி ஒரு நேர்காணலில் குறிப்பிடும்போது, "என்னுடைய புதின மாந்தர்கள் கற்பனையானவர்கள் அல்ல. அவர்களின் வாழ்க்கை தகவல் பற்றிய அடிப்படையில் அமைத்துள்ளேன்" (விந்தன் நாவல்கள்.,ப.23 ) என்று கூறுகிறார். இக்கூற்று விந்தன் புதினங்களில் இடம்பெறும் பாத்திரங்கள் உண்மைத் தன்மையுடைய பாத்திரங்கள் என்பதைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

**அழகு**

அழகு என்பது வெளி அழகுடன் சேர்ந்து ஆளுமை, கருணை, நேர்மை, மரியாதை, நேர்த்தி, இலட்சியம் போன்ற அக அழகுகளையும் உள்ளடக்கியது என்பது தனியர் அல்லது சமூக உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பார்வையாகும். இந்தப் பெண்ணியக் காரணிகளின் அடைப்படையில் உடலியல் பண்புகளும் மதிப்பிடப்படுவது இன்றைய அழகியல் கோட்பாடாகும்.

பெண்ணுள்ளம் பெரிதும் அகநோக்குச் சிந்தனை உடையது. உள்ளத்து உணர்வுகளோடும், உறவுகளோடும் தொடர்புடையது. புற உலகத்தின் விதிகளுக்கும், சட்டங்களுக்கும் அப்பாற்பட்டது. எனவே, ஆண் வாழ்க்கையை விடப் பெண் வாழ்க்கையே போராட்டம் மிக்கதாய் விளங்குகின்றது. பெண்கள் குடும்பம் என்ற அமைப்பில் தமக்கு ஏற்படும் பிரச்சனைகளைக் கண்டு வருந்திக் கலங்கிவிடாமல் அவற்றை எதிர்கொண்டு பின்னாளில் தன்னை மீட்டுக்கொள்ளும் திறன் வாய்ந்தவர்கள் ஆவர். அவ்வகையில் கண் திறக்குமா — சாந்தினி, மனிதன் மாறவில்லை — நறுமணம், காதலும் கல்யாணமும் - பாமா, சுயம்வரம் — மதனா, பாலும் பாவையும் - அகல்யா , ஆகியோர் குடும்ப அமைப்பில் மற்றும் சமூக அமைப்பில் நிகழும் சிக்கல்லகளை எதிர்கொண்டு வாழும் பாத்திரங்களாகவும் அன்பு அலறுகிறது - லலிதா மட்டும் தம் உயிரை மாய்த்துக்கொள்ளும் பாத்திரமாகவும் படைக்கப் பெற்றுள்ளனர் என்பதனை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

**சமத்துவப் பெண்ணியம்**

சமூகத்தில் கல்வி போன்ற ஆதாரமான உரிமைகள் மீட்கப்படுவதனாலேயே பெண்ணின் பிரச்சனை முடிந்து விடுவதில்லை என்பதையும். இளமை மணம், விதவை நிலை ஆகிய கொடுமைகள் குறைந்தாலும் பாலின அடிப்படையில் நிலவும் சமத்துவமற்ற போக்கு மாற்றம் பெறும் வரை பெண் ஒரு மனிதப்பிறவியாக ஏற்கப்படுதல் கடினம் என்பதையும் சுட்டிக்காட்டியது சமத்துவப் பெண்ணியம் என்பர் .

அவ்வகையில், கண் திறக்குமா? புதினத்தின் கதைத்தலைவி மருத்துவம் பயின்ற சாந்தினி, பாரிஸ்டர் பரந்தாமனாரின் செல்லப் பெண்ணாவாள். இவள் ஆண்களோடு பெண்களும் சரிநிகராக வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். சாந்தினி தன்னைக் காதலித்த செல்வம் தன் தந்தையைப் பார்க்க வந்தபோது பரந்தாமன் வீட்டில் இல்லை என்று அறிந்தவுடன் செல்வம் வெளியேறினான். அப்போது சாந்தினி, "அப்பா வரும் வரை இங்கே நீங்கள் இருந்தால் என்ன? என்று கேட்டாள். செல்வம் ‘‘ஒரு பெண் தனிமையில் இருக்கும்போது எப்படி? என்று கேட்டபோது சாந்தினி "ஆண் மகன் வந்தால் அப்படியே தழுவிக் கொண்டு விடுவாளாக்கும்" (விந்தன் நாவல்கள்,ப.32) என்று எதிர் கேள்வி

கேட்டு பெண்கள் குறித்த பொதுப் பார்வை குறித்துக் கூறி அவனைச் சிந்திக்க வைக்கிறாள். பின்னர் "இந்தப் பெண்கள் அவ்வளவு பலவீனர்களா? எங்களுக்கென்று மானம், மரியாதை, உயர்ந்த எண்ணங்கள், ஒழுக்கம் ஒன்றுமே கிடையாதா? இப்படியெல்லாம் நடந்து கொள்வதன் மூலம் அவற்றையெல்லாம் நீங்கள்தான் எங்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமா? அதிலும் உங்களைப் போன்ற புதுயுகத்தை ஸ்தாபிக்கப் போகிறவர்கள் சமூகத்தைச் சீர்திருத்திப் புரட்டிப் போகிறவர்கள், பெண்களுக்குப் பரிபூரண விடுதலையளிக்கப் போகிறவர்களே இப்படி நடந்துகொண்டால், நாங்களெல்லாம் என்றைக்குத்தான் ஆண்களோடு சரிநிகர் சமானமாகப் பழகுவது" (விந்தன் நாவல்கள்,ப.32) என்று கேட்பதன் மூலம் பெண்களுக்கான ஒழுக்கத்தையும், விடுதலையையும் சம உரிமையைப் பற்றியும் வினவும் வகையில் சாந்தினி படைக்கப்பட்டுள்ளாள்.

**பாலியல்**

உலக அளவில் பெண்கள் மீதான வன்முறை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அனைத்துப் பொது இடங்களிலும் பரவலாகப் பெண்கள் பாலியல் சீண்டலுக்கும், துன்புறுத்தலுக்கும் ஆளாகிறார்கள். உலகம் முழுவதும் பெண்களுக்கான உரிமையும் சட்டங்களும் இயற்றப்பட்டு அநீதி நடந்தால் தண்டிப்பும் நிகழும் இந்நிலையில் இன்றும் பாலியல் துன்புறுத்தல் எங்கும் இருக்கிறது.

மனிதன் மாறவில்லை புதினத்தின் கதைத்தலைவி நறுமணம் ஆவாள். நறுமணம் தாயை இழந்தவள். தந்தை இரண்டாவது திருமணம் செய்த பின் சித்தியின் கொடுமையிலிருந்து தப்பித்து மாமா வீட்டிற்குச் செல்கிறாள். அங்கு, மாடி அறையில் தனியாக உறங்கிக் கொண்டிருந்த போது மாமா யாருக்கும் தெரியாமல் நறுமணத்தைக் கட்டிப்பிடிக்கிறார். மாமாவின் பாலியல் சீண்டலுக்கு ஆளாகும்போது "மாமா என்னுடைய அன்னையுடன் பிறந்தவர்கள் நீங்கள். அன்னைக்குப் பிறகு அன்னையாக இருக்க வேண்டியவர்கள் நீங்கள். அப்படிப்பட்ட உங்களை இப்படியெல்லாம் பேச வைத்தது, பேச வைப்பது என் அழகுதான் என்றால் அந்த அழகு அழிந்து போகட்டும்" (விந்தன் நாவல்கள்,ப.490) என்கிறாள். நறுமணம் பின்னர் இங்கிருந்து தப்பி, தன் சித்தியின் கொடுமையிலேயே வாழ்ந்துவிடலாம் என்று நினைத்து தன் தந்தையின் இறப்புக்குப் பின்னர் பாட்டி, அண்ணன் உதவியோடு சென்னையில் வாழ்ந்து வாழ்கிறாள்.

ஆணாதிக்கம் என்பது ஒரு வகைச் சமூக நோயாகும். ஆணாதிக்கமானது, பெண் மற்றும் ஒரு குடும்பம் மற்றும் சமூகக் குழுவின் மற்ற உறுப்பினர்கள் மீது பாலியல் ரீதியாகத் தன் ஆதிக்கத்தை நிறுவுகிறது. அச்சூழலில் இருந்து தப்பிக்கும் பாத்திரமாகப் நறுமணம் படைக்கப்பட்டிருக்கிறாள்.

**தாய்மை**

உலகின் பிறப்புக்களில் மிக உன்னதமானது மனிதப்பிறப்பு. அதில் தாய்மை உணர்வு பரிபூரணமானது. தாய்மை என்பது ஒரு பெண்ணின் மகிழ்ச்சியைத் தரும் உணர்வு. ஒரு குழந்தைக்குச் சுயமரியாதையை உருவாக்கும் திறன். குழந்தை தனது அன்புக்குரிய தாய் அருகில் இருப்பதை உறுதி செய்யும் போது, வாழ்க்கையின் முதல் தருணங்களிலிருந்து இது உருவாகிறது எனலாம்.

பேராசிரியர் நெடுமாறன் சொன்ன பொய்களை நம்பி நறுமணம் அவரைக் காதலித்து, கற்பைப் பறிகொடுத்து ஆண் குழந்தையைப் பெறுகிறாள். ஆனால், நெடுமாறன் ஏமாற்றி விடுகிறார். பேராசிரியர் நெடுமாறன் நறுமணத்தை ஏற்றுக் கொள்ளாமல் தன் மாணவர் ராமமூர்த்தியைத் திருமணம் செய்து கொள் என்று கூறுகிறார். அதற்கு நறுமணம் மறுத்து விட்டு, நானோ 'இப்படித் தான் வாழ வேண்டும்' என்று நினைப்பவள். எனக்கு அது சரிப்பட்டு வராது" (விந்தன் நாவல்கள்,ப.527) என்று ஒருவனுக்கு ஒருத்தியாகவும், தன்மானத்தோடு வாழும் பெண்ணாகத் திகழ்கிறாள்.

**பெண்ணின் வலிமை**

உலகில் படைக்கப்பட்டுள்ள இனங்களில் பெண்கள் வலிமையானவர்கள் ஆவர். "பெண்ணானவள், வலியை மட்டும் புலம்பித் தீர்க்காமல், பழையதை எடுத்துரைத்து அதன் மரபுகளை உடைத்தெறிந்து விட்டு புதிய அடையாளங்களை உருவாக்கி இன்றைய பெண்களின் தேவை இவைதான் என்பதனை படைத்துக் காட்டுவதாகும்." (கு.பகவதி., திறனாய்வு அணுகுமுறை, ப.3) எனும் கூற்றுக்கேற்ப, காதலும் கல்யாணமும் எனும் புதினத்தின் கதை நாயகி பாமா. அவள் அரசாங்க அலுவலகத்தில் வேலை புரியும் பெண்ணாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். "பாமாவின் வாழ்க்கை சுகபோகமும், சோம்பேறித்தனமும் இல்லாத சுய உழைப்பை நம்பி வாழ்கின்ற வாழ்க்கை, ……உடன் பிறப்பையும், ஊரையும் உள்ளத் தூய்மையுடன் நம்பி உண்மையானாலும், உழைப்பாலும் உயர்ந்து நிற்கின்ற வாழ்க்கையே பாமாவின் வாழ்க்கையாக அமைந்துள்ளது" (விந்தன் நாவல்கள்,ப.161) என்று ஆசிரியர் அறிமுகம் செய்வதால் பாமாவின் பண்பு நலன்களை அறியலாம்.

மோகன், பாமாவை முதல் முதலில் கண்டவுடன் "நீங்கள் பெண்ணா? இல்லை..." என்று கேட்கும்போது "எப்படித் தோன்றுகிறது, உங்களுக்கு? பெண்ணாகத் தோன்றுகிறதா! இல்லை, பேயாகத் தோன்றுகிறதா" (விந்தன் நாவல்கள்,ப.583) என்று இரைந்து பேசுகிறாள். மோகன் காகிதத்தை எடுத்துப் பந்துபோல் சுருட்டி பாமா மேல் விட்டெறிந்து "மன்னிக்க வேண்டும். குறி தவறி விட்டது" என்றவுடன் "இல்லை, குறி தவறாமல் தான் விழுந்திருக்கிறது" (விந்தன்

நாவல்கள்,ப.585) என்று அவள் ‘‘கன்னத்தில் பளார்’’ என்று ஓர் அறை கொடுக்கிறாள். மேலும், மோகன் மறு கன்னத்தைக் காட்டும்போது ‘‘சீ, நீயும் ஒரு மனிதனா?’’ (விந்தன் நாவல்கள்,ப.586) என்கிறாள். பின்னர் ஒருமுறை, மோகனிடம் ‘‘எனக்குத் தெரிந்தவரை எந்தப் பெண்ணின் அழகும், அந்த அழகை அவள் வெளிப்படுத்தும் முறையும் ஆண்களுக்கு வெறியூட்டுவதாயிருக்கக் கூடாது. சாந்தி அளிப்பதாயிருக்க வேண்டும் என்று கூறி பெண் என்பவள் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதற்குச் சான்றாகத் திகழ்கிறாள். தன் தம்பி பாலு, தன் அக்கா ஆகியோர் மீது அன்பு கொண்டவளாகவும் பாமா திகழ்கிறாள்.

**தீவிரவாதப் பெண்ணியம்**

பாலினச் சமத்துவம் என்பது அரசியல் அமைப்புச் சட்டங்களில் உறுதிபடுத்தப்பட்டிருந்த போதும் நடைமுறையில் அது சரிவரச் செயலாக்கம் பெறாததால் அதனைக் காகிதச் சமத்துவம் என்று கூறும் தீவிரப் பெண்ணியம் என்பது தீவிரமான ஆண் எதிர்ப்பு நோக்குடையதாகும். பெண் என்பவள் ஓர் உடலாக மட்டுமே பார்க்கப்படுவதை எதிர்க்கும் இக்கோட்பாடு பால் அடிப்படையில் பெண்ணை ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கும் எல்லா நிறுவனங்களுக்கும் எதிராகத் தன் கருத்தை வைக்கிறது. தேவை ஏற்பட்டால் குடும்ப அமைப்பு இன்றியும் ஆணின் சார்பு இன்றியும் ஒரு பெண்ணால் தனித்த சுதந்திரத்துடன் வாழ முடியுமெனக் கூறுவது தீவிரவாதப்பெண்ணியக் கோட்பாடாகும்.

சுயம்வரம் எனும் புதினத்தின் கதைத் தலைவி மதனாவைப் பணி புரியும் பெண்ணாக ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார். அவள் , மாதவன் என்பவனைக் காதல் திருமணம் செய்வதன் மூலம் சிலநாட்கள் கணவனைப் பிரிந்து பல இன்னல்களைத் தாண்டி எதிர்த்து வாழும் புறநிலைப் பாத்திரமாக மதனா படைக்கப்பட்டிருக்கிறாள். சில நாள்கள் பிரிந்து இருந்த போதிலும் மாதவன் மீது மதனா அதிக நம்பிக்கையும், காதலையும் கொண்டிருக்கிறாள். அவள் தோழி அருணா மதனாவை மாதவனிடமிருந்து பிரிக்க முயற்சிக்கிறாள். பின் அருணாவும் தன்னைக் காதலிப்பதாக மாதவன் தன்னிடம் சொல்லியதை இவள் நினைத்துப் பார்க்கிறாள். அருணா, மதனாவிடம் நீ வேறு யாரையாவது திருமணம் செய்து வாழ முடியாதல்லவா? என்று கேட்ட போது "ஏன் முடியாது? அதெல்லாம் அந்தக் காலம் இந்தக் காலத்தில் தான் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் விரும்பவில்லையென்றால் உடனே விவாகாரத்துச் செய்து கொண்டு விடலாமே" (விந்தன் நாவல்கள்,ப.866) என்கிறாள். பின்னர் அருணா, மதனாவிடம், ‘‘மாதவனுக்காக நீ மனம் உடைந்து எதையாவது செய்து விடாதே!’’ என்றவுடன், மதனா, "அந்தக் கவலை மட்டும் உனக்கு வேண்டவே வேண்டாம். யார் என்னைக் கைவிட்டாலும் கைவிடாவிட்டாலும் என் உயிரை

மட்டும் நான் கைவிடுவதாக இல்லை" (விந்தன் நாவல்கள்,ப.884) என்று உறுதிபடக் கூறும் தீவிர சிந்தனை கொண்ட பாத்திரமாக மதனா திகழ்கிறாள்.

**காதலும் திருமணமும்**

காதல் என்ற உணர்வு நிலையானது இல்லை. அது காலத்திற்கு காலம் மாறக்கூடியது. பொருளாதாரச் சுதந்திரம், பிள்ளைப்பேறு இவையே திருமணத்தின் நோக்கங்கள். காதல் திருமணங்கள் இந்நோக்கங்களை நிறைவேற்றலாம். எனவே, "கல்வி, தொழில், பொருளாதார நிலை ஆகியவற்றை குறித்த ஒரு தெளிவுடன் மனமொப்பி ஆண் பெண் இருவரும் ஒன்றாக ஒப்பந்தம் செய்தால் அதுவே காதல் மணத்தைவிடச் சிறப்பாக இருக்கும்" (பெண்ணின் பெருமை ப.222) என்பார் திரு.வி.க.

காதல் என்பது "பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஓர் ஆற்றலை உருவாக்கி, பெண்மை அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பினும், அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக்கொள்ள வைப்பதாகும்".(இரா.பிரேமா., பெண்ணியம், ப.80 ) எனவே, திருமணத்தையும் அதற்கு உண்டான காதலையும் பெண்ணிய நோக்கில் அறிவது அவசியம் ஆகும்.

பாலும் பாவையும் எனும் புதினத்தின் கதைத்தலைவி அகல்யா. அவள், செல்வத்தின் செருக்கு மிக்க அழகு உடையவள் என அகல்யாவின் அழகை வெளிப்படுத்தும் வகையில் ஆசிரியர் படைத்துள்ளார்.

இந்திரன், அகல்யாவைக் காதலித்ததை விட அவளது நகைகளையும், பணத்தையும் அதிகமாகக் காதலிக்கிறான். பின்னர், இந்திரனால் கைவிடப்படுகிறாள். காதலில் ஏமாந்த அகல்யா இந்த உலகில் நம்பிக்கையோடு வாழ விரும்புகிறாள். "அந்தத் துரோகிக்காக நான் ஏன் உயிரை விட வேண்டும். அதனால் "நான் அடையப்போகும் நன்மைதான் என்ன?. மற்றவர்களைப் போல நானும் சமூகத்தின் அனுதாபத்தை வேண்டுமானால் பெறலாம். செத்துத்தான் அந்த அனுதாபத்தைப் பெற வேண்டுமென்றால் எனக்கு அது வேண்டவே வேண்டாமே" (விந்தன் நாவல்கள்,ப.192) என்றும் "ஆண்கள் தங்களுடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்ளாத வரை பெண்கள் தங்களுடைய கற்பை எப்படிக் காப்பாற்றிக் கொள்ள முடியும்" (விந்தன் நாவல்கள்,ப.256) என்று கனகலிங்கத்திடமும் வினவும் புரட்சிப் பெண்ணாகத் திகழ்கிறாள்.

அகல்யா தன்னைக் காப்பாற்றிச் சென்னைக்கு அழைத்து வந்த கனகலிங்கத்தின் மீது இரக்கமும் காதலும் கொண்டவளாகத் திகழ்கிறாள். கனகலிங்கம் அவள் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், அகல்யா மனம் உடைந்து "ஐயோ! ஆண்களுக்கு ஒரு நீதி, பெண்களுக்கு இன்னொரு நீதியா. இந்த அக்கிரமத்துக்கு இன்னும் என்னைப் போல் எத்தனை

பெண்கள் பலியாக வேண்டும். •••, சீர்த்திருத்தம், சீர்த்திருத்தம் என்று வாய் ஓயாமல் அடித்துக் கொள்ளும் இளைஞர் உலகம், இந்தக் கொடுமையை இன்னும் எத்தனை நாட்களுக்குச் சகித்துக் கொண்டிருக்கப் போகிறது" (விந்தன் நாவல்கள்,ப.298) என்று சமூகத்தில் உள்ள பெண்களின் நிலையை எண்ணிக் கலங்கும் பெண்ணாக, பிறர் துன்பங்களை நினைத்து வருந்தும் பாத்திரமாக அகல்யா படைக்கப்பட்டுள்ளாள். அகல்யாவைப் போலவே, அன்பு அலறுகிறது எனும் புதினத்தின் கதைத்தலைவி லலிதா திருமணம் முடிந்த பின் புகுந்த வீட்டில் படுகின்ற வேதனை பதிவு செய்யப்பட்டுள்ளது.

லலிதா, ஸ்ரீமான் லிங்கேஸ்வரனிடம், "பெண் என்பவள் மலர் என்றும், ஆண் என்பவன் வண்டென்றும் எண்ணித் திரியும் பெண் பித்தர்களுக்குப் புத்தி கற்பிப்பார்கள் " (விந்தன் நாவல்கள்,ப.389) என்று எச்சரிக்கை செய்கிறாள். மேலும், "என்னுடைய பெண்மையைப் பலிகொள்ள விரும்பி, என்னிடம் ஏன் உங்களுடைய காமவெறி பிடித்த கோபக்கரங்களை நீட்டுகிறீர்கள். கணவரிடம் பெறத்தக்க இன்பத்தை நான் பெறாவிட்டால் என்ன? அதற்காகக் கடைத்தெருவில் நின்று உங்களிடம் பேரம் பேச வேண்டுமா? போய் வாருங்கள் ஐயா, போய் வாருங்கள்! என் கணவர் எப்படி எந்தப் பெண்ணுக்கும் கணவராக இருக்க லாயக்கற்றவராகப் போய் விட்டரோ அதேமாதிரி நானும் எந்த ஆணுக்கும் மனைவியாக இருக்கத் தகுதியற்றவளாகி விட்டேன் என்று நினைத்து கொண்டு போய் வாருங்கள் ஐயா! போய் வாருங்கள்" (விந்தன் நாவல்கள்,ப.385) என்று தன்னுடைய கணவன் மீது உள்ள அன்பையும் உண்மையும் வெளிப்படுத்தும் வகையில் லலிதா திகழ்கிறாள். புதினத்தின் முடிவில் பிறர்மனை நோக்குதலே பேராண்மை என்றும் வெறியோடு வாழும் மனிதர்களை வெறுத்து, விஷம் குடித்துத் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள்.

இவ்வாறாக ,விந்தன் தம் புதினங்களில் பெண் மாந்தர்களைத் படைத்து அவர்கள் கல்வியாலும், பணியாலும் அறிவாலும் உயர்ந்து நிற்கும் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

**முடிவுரை**

விந்தன் தம் புதினங்களில் தாம் வாழ்வில் கண்ட சமூகச் சீர்கேடுகளையும் , அதில் பாதிக்கப்பட்டு மீளவும் சிறப்பான வாழ்க்கை வாழ்ந்த பெண்களைத் தம் புதினங்களின் வழியாகப் படைத்துக் காட்டியுள்ளார் எனலாம். கண் திறக்குமா நாவலின் பாத்திரம் சாந்தினி ஆண் பெண் சமூகச் சமநிலையைப் பேசும் பாத்திரமாகவும் மனிதன் மாறவில்லை நாவலின் பாத்திரம் நறுமணம் தன் கற்பை இழந்து ஒரு குழந்தையைப் பெற்று அவனால் நிராகரிக்கப்பட்டாலும் மற்றோர் திருமணம் செய்து கொள்ளாமல் ஒருவனுக்கு ஒருத்தியாகவும், தன்மானத்தோடு வாழும் பெண்ணாகவும் படைக்கப்பட்டிருக்கின்றனர். மேலும், காதலும்

கல்யாணமும் நாவலின் பாத்திரம் பாமா உண்மையானாலும், உழைப்பாலும் உயர்ந்து நிற்பவளாகவும் சுயம்வரம் — மதனாவின் கணவன் அவளைக் கைவிட்டாலும் தன் உயிரை விட்டுவிடாத பாத்திரமாகவும் படைக்கப்பட்டிருக்கின்றனர். பாலும் பாவையும் நாவலின் பாத்திரம் அகல்யா காதலில் தோல்வியுற்றாலும் சமூகத்தை எதிர்கொண்டு வாழும் பெண்ணாகப் படைக்கப்பட்டிருக்கிறார். இவ்வாறான பாத்திரங்கள் ஆண்களுக்கு ஆதரவான சமூக அமைப்பில் ஆணாதிக்கக் குடும்ப அமைப்பில் மற்றும் சமூக அமைப்பில் தனக்கு நிகழும் பிரச்சனைகளை எதிர்கொண்டு வாழும் பாத்திரங்களாகப் படைக்கப் பெற்றுள்ளனர் . மாறாக அன்பு அலறுகிறது புதினத்தின் கதைத்தலைவி லலிதா மட்டும் தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் பாத்திராமாகப் படைக்கப்பட்டிருக்கிறாள்.

**பார்வை நூல்கள்**


1. அரங்க.மல்லிகா., தமிழ் இலக்கியமும்,பெண்ணியமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,41.பி.சிட்கோஇண்டஸ்டிரியல் எஸ்டேட் , அம்பத்தூர்,சென்னை -600098. முதல் பதிப்பு- நவம்பர் 2002.
2. கீதா.கோ.வெ., தி. ஜானகிராமனின் நாவல்கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் , 41.பி.சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் , அம்பத்தூர்,சென்னை -600098. 2002
3. ஞானசம்பந்தன்.அ.ச.,இலக்கியக் கலை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் , திருநெல்வேலி : 1953.
4. திரு.வி .க., பெண்ணின் பெருமை , பூம்புகார் பதிப்பகம்,சென்னை -16. 16 ஆம் பதிப்பு ஆகஸ்ட் 1998.
5. பகவதி.கு., திறனாய்வு அணுகுமுறைகள்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி , சென்னை. மு.ப.மார்ச் -1989 .
6. பிரேமா. இரா., பெண்ணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி ,சென்னை -600113. மு.ப.நவம்பர் 1994 .
7. ராஜம் கிருஷ்ணன் ., காலந்தோறும் பெண்மை, தாகம் வெளியீடு, தியாகராய நகர், சென்னை -600017. மு.ப. டிசம்பர் 1990.
8. விந்தன் நாவல்கள் (தொகுப்பும் பதிப்பும்), காவ்யா, 16,இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024. மு.ப. 2016

***References:***


*1. Aranga. Mallika, Tamil Iakkiyamm Penniyamm, New Century Book House Private Limited, 41.B. SIDCO Industrial Estate, Ambattur, Chennai - 600098. First Edition - November 2002.*

*2. Geetha. Ko.Ve., Thi. Janakiramanin Novel Kalai, New Century Book House Private Limited, 41.B. SIDCO Industrial Estate, Ambattur, Chennai - 600098. 2002*

*3. Gnanasambandan. A.Sa., Iakkiya Kalai, Tirunelveli Thenninhiya Saiva Siddhanta Nool Kazhagam, Thirunelveli. 1953.*

*4. Thiru.Vi.Ka., Pennin Pemai, Poombuhar Pathippagam, Chennai - 600016. 16th Edition August- 1998.*

*5. Bhagavathi. Ku, Thiranaayvu Anugumuraigal, Ulaga Thamizhaaraaychi Niruvanam, Tharamani, Chennai. - 600113. First Edition March - 1989.*

*6. Prema. Iraa., Penniyam, Ulaga Thamizhaaraaychi Niruvanam, Taramani, Chennai - 600113. First Edition November 1994.*

*7. Rajam Krishnan, Kalamthorm Penmai, Thagam Veliyeedu, Thiyagaraya Nagar, Chennai - 600017. First Edition December 1990.*

*8. Vindhan Novels (Thoguppum Paguppum ) First Edition: 2016, Publisher: Kavya, 16, Irandaam Kurukku Sreet , Trustpuram, Kodambakkam, Chennai - 600 024.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com